**கவனிக்க.**- *2016.01.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1951 - 2016 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා - 2016.01.22

*1951 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 542 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| ஏலவிற்பனைகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 547 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2016, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

திருத்தம் செய்தல்

**கம்புறுபிட்டிய பிரதேச சபை**

*வரியை நிர்ணயித்து அறவிடல் - 2016*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் 9(3) ஆம் பிரிவின் பிரகாரம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் படி கம்புறுபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் ஆகிய விமலா அபேகோன் ஆகிய என்னால் தீர்மான இலக்கம் 446 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டதும். 2015.11.06 ஆந் திகதிய 1940 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான வரிப் பணம் நிர்ணயித்து அறவிடல் அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்வதுடன் கீழ்வரும் முறையில் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் அறிவிக்கப்பட சமர்ப்பிக்கின்றேன்.*

*விமலா அபேகோன்,*
*செயலாளர்,*
*கம்புறுபிட்டிய பிரதேச சபை.*

*2015, திசெம்பர் 23.*

**கம்புறுபிட்டிய பிரதேச சபை**

***வரியை நிர்ணயித்து அறவிடல் - 2016***

*கம்புறுபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் ஆகிய விமலா அபேகோன் ஆகிய என்னால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் 9(3) ஆம் பிரிவின் பிரகாரம் அச்சட்டத்தின் 134 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அச்சட்டத்தின் 134(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் அதிகாரங்கள், நடவடிக்கைகள், விடயதானங்கள் என்பவற்றை அமுல்படுத்தும் அதிகாரி என்ற வகையில் 2016 ஆம் ஆண்டிற்கான வரியை நிர்ணயம் செய்து அறவீடு செய்தல் தொடர்பில் கீழ்வரும் தீர்மானத்தை 2015.12.23 ஆந் திகதியின் தீர்மான இலக்கம் 853 இன் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*விமலா அபேகோன்,*
*செயலாளர்,*
*கம்புறுபிட்டிய பிரதேச சபை.*

*2015, திசெம்பர் 23.*

***தீர்மானம்***

*கம்புறுபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் ஆகிய விமலா அபேகோன் (அதிகாரங்கள், நடவடிக்கைகள், விடயதானங்கள் என்பவற்றை அமுல்படுத்தும் அதிகாரி) ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் 9(3) ஆம் பிரிவின் பிரகாரம் அச்சட்டத்தின் 134 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் 2016 ஆம் வருடத்திற்கான வரி அறவீடு செய்தல் கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானம் செய்கின்றேன்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 (1) ஆம் உப பிரிவின் கீழ் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அபிவிருத்தி பெற்ற பிரதேசமென அறிவிக்கப்பட்ட/தற்போது வரிகள் அறவீடு செய்யப்படும் பிரதேசங்களுக்குள் அமைந்துள்ள வீடுகளின், கட்டிடங்களின், காணிகளின் நிலப்பிரதேசங்களின் வருடாந்தப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டிற்கான புதிய கணிப்பீட்டுப் பெறுமதிக்கேற்ப/மதிப்பீட்டு விலைக்கேற்ப 2016 ஆம் ஆண்டிற்கான கணிப்பீட்டுப் பெறுமதி/மதிப்பீட்டு விலைக்கேற்ப ஏற்றுக்கொள்வதெனவும். இந்தப் புதிய கணிப்பீட்டுப் பெறுமதிக்கேற்ப 1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் கட்டளைப் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட சொத்துகள் மீது மேற்குறிப்பிடப்பட்ட கணிப்பீட்டுப் பெறுமதியில் 6% ஐ வரியாக அறவீடு செய்யப்பட வேண்டுமெனவும்,*

*மேலும் 2016 ஆம் ஆண்டிற்கு செலுத்தப்படவேண்டிய வருடாந்த வரிப் பணம் அவ்வாண்டின் சனவரி 31 ஆந் திகதிக்கு முன் செலுத்தப்படுமாயின், வருடாந்த வரிப்பணத்தில் 10% கழிவும், வருடாந்த வரிப்பணம் காலாண்டுகளுக்கு ஒரு முறை செலுத்தப்படுமாயின்,*

கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கழிவு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டுமெனவும், பிரதேச சபைச் சட்டத்தின் 134(6)/ 134 (7) உப பிரிவின் கீழ் தீர்மானம் செய்கின்றேன்.

**அட்டவணை**

| காலாண்டு | செலுத்தப்படவேண்டிய திகதி | 5% கழிவைப்பெறும் இறுதி திகதி |
|---|---|---|
| முதலாம் காலாண்டு | 2016, சனவரி 1 | 2016, சனவரி 31 |
| இரண்டாம் காலாண்டு | 2016, ஏப்பிறல் 4 | 2016, ஏப்பிறல் 30 |
| மூன்றாம் காலாண்டு | 2016, யூலை 1 | 2016, யூலை 31 |
| நான்காம் காலாண்டு | 2016, ஒற்றோபர் 1 | 2016, ஒற்றோபர் 30 |

1-630

---

**அத்துரலிய பிரதேச சபை**

1893 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கோவதை கட்டளைச் சட்டத்தின்படி

இங்கு கீழ் அட்டவணையில் பெயர் குறித்துள்ள நபரினால் அங்கு குறித்துள்ள இடத்தில் 2016 ஆம் ஆண்டுக்காக இறைச்சி வியாபாரம் மற்றும் மாட்டுத் தொழுவம் என வியாபாரம் நடத்தப்பட வருடாந்த உத்தரவுப் பத்திரத்தினை வேண்டி விண்ணப்பம் ஒன்றினை எனக்கு முன்வைத்துள்ளதால், இந்த உத்தரவுப் பத்திரத்தை வழங்குவதற்காக அத்துரலிய பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் ஏதாவது ஒருவர் எதிர்ப்பை தெரிவிப்பதாயின் அவர் அதற்கான காரணத்தையும் குறித்து எழுத்து மூலம் இரண்டு பிரதிகளாக இந்த அறிவித்தலை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தில் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எனக்கு அனுப்பிவைக்குமாறு கோவதை கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 7(2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

கே. பீ. பேமவதீ,
செயலாளர்,
அத்துரலிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அத்துரலிய,
2015, திசெம்பர் 29.

| விண்ணப்பதாரியின் பெயர் விலாசம் | வியாபாரம் | இறைச்சி வியாபார நிலையம் | தொழுவம் |
|---|---|---|---|
| எம். எச். எம். நவ்சாத்<br>இல. 95, கொடவத்த வீதி,<br>கொடபிட்டிய | இறைச்சி விற்பனை | கொடபிடிய கலபிலாகமலியத்த காணி | உடுவரகெவத்த<br>கொடபிட்டிய |

1-631

---

**கண்டி மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சனசமூக நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான சட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் மூலம் அவர்களுடைய பெயருக்கு முன்பதாக குறிப்பிடப்பட்டுள்ள சனசமூக நிலையமானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நடாத்திச் செல்வதற்கான 2016 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணபப்பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூக நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

இச்சமூக நிலையத்திற்கு அருகில் அல்லது சமூக நிலையம் செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் இடத்திற்கு அருகில் வசிக்கும் யாதுமொரு நபர் இச்சமூக நிலையத்திற்கு வழங்கும் அனுமதிப்பத்திரத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக இருப்பின் இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முதலாம் நாள் தொடக்கம் நான்கு கிழமைக்குள் தமது எதிர்ப்பிற்கான காரணத்தை எழுத்து மூலமாக இரண்டு பிரதிகளுடன் எனக்கு சமர்ப்பிக்கும்படி இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

மாநகர பிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2015, திசெம்பர் 30.

அட்டவணை

| விண்ணப்பதாரியின் பெயர் | சனசமூக நிலையத்தினது தலைவரா/செயலாளரா | சமூக நிலையத்தின் பெயர் | சமூக நிலைய நடவடிக்கைகளை செய்வதற்கும் எதிர்பார்க்கும் நிலையம் |
|---|---|---|---|
| செயலாளர் | கௌரவ செயலாளர் | த கண்டி காட்டின் கிளப் | இல. 9 சங்கராஜ மாவத்தை, கண்டி |

1-636

---

**வரகாபொல பிரதேச சபை**

பயிர்ச்செய்கை வரி விதித்தல் - 2016

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (3) ஆம் பிரிவின்படி வரகாபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ வரகாபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் வரகாபொல பிரதேச சபை 2015 ஆம் ஆண்டு யுலை மாதம் 28 ஆந் திகதி நடத்திய சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் 06-02-02 நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

கீர்த்திசிறி விஜேதுங்க,
தலைவர்,
வரகாபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வரகாபொல,
2015, யுலை 28.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (3) ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் வரகாபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய வரகாபொல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ளதும் நிரந்தரமாகவோ கிரமமாகவோ பயிர்ச்செய்கைக்கு உட்பட்டதுமான-

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (3) ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வரகாபொல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள 5 ஹெக்டயாருக்குக் குறைவான ஆனால் 1 ஹெக்டயார் அல்லது அதற்கு மேலுள்ள ஒவ்வொரு காணிக்கும் எனக் குறித்த காணியின் ஒவ்வொரு ஹெக்டயார் மீதும் 2016 ஆம் வருடத்திற்கென 50 ரூபா வீதம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கை வரியை விதித்து அறவிடுவதற்கும்,

(ஆ) 5 ஹெக்டயார் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவுள்ள ஒவ்வொரு காணியின் மீதும் ஒரு ஹெக்டயாருக்கும் 10 ரூபா வீதம் 2016 ஆம் ஆண்டில் பயிர்ச்செய்கை வரியை விதித்து அறவிடுவதற்கும் இத்தால் தீர்மானிக்கின்றேன்.

(இ) 2016 ஆம் ஆண்டுக்கான விதிக்கப்பட்ட ஏக்கர் வரி, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவடையும் எல்லா காலாண்டுக்கும் சாதாரணமாக நான்கு தவணைகளில் அக்மீமன பிரதேச சபை அலுவலத்தில் செலுத்தப்பட வேண்டும் என மேன்மேலும் அறியத்தருகின்றேன்.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்கான முழுவதற்குமான ஏக்கர் வரி 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்பட்டால் அந்த முழுவதுமான ஏக்கர் வரி தொகையின் நூற்றுக்கு பத்து சதவீத (10%) கழிவும், ஒவ்வொரு

காலாண்டுக்கும் இந்த ஏக்கர் வரி ஒவ்வொரு காலாண்டுக்குள் முதல் மாதத்தில் இறுதி திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டால் நூற்றுக்கு ஐந்து (5%) வீத கழிவு செலுத்தப்படும்.

(ஏ) மேலும் தகுந்த காலாண்டுக்குள் தகுந்த ஏக்கர் வரி செலுத்தப்படவில்லையானால் 10% த்து (அதிகமாக) தண்டப்பணம் அறவிட வேண்டும் என்பதை தீர்மானம் செய்வதை மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

1-639

---

**கண்டி மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயர் சூட்டுதல், அவற்றுக்கான நடு கற்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றை பரிபாலித்தல் பற்றிய சட்டம்*

**"எலிபன்ட் பாத் பெசேஜ் மாவத்தை"**

2011.12.21 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்ட 8 (44) ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வருமாறு வீதிப்பெயரை மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 7 (11) ஆம் பிரிவின் கீழ் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்கள் படியும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயர் சூட்டுதல் அவற்றுக்கான நடுகற்களை நிர்மாணித்தல், அவற்றை பரிபாலித்தல் ஆகிய சட்டத்தின் கீழான ஏற்பாடுகள் படியும் மத்திய மாகாண சபையின் முதலமைச்சரினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு ஏற்ப கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மாவத்தையை "எலிபன்ட் பாத் பெசேஜ் மாவத்தை" என பெயர் சூட்டப்பட்டுள்ளது எனும் பிரகடனம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

சந்தன தென்னகோன்,
மாநகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. உள்ளூர் அதிகார சபையின் பெயர் | : | கண்டி மாநகர சபை |
| 2. மாவட்டம் | : | கண்டி |
| 3. வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 4. புதிதாக சூட்டப்பட்டுள்ள பெயர் | : | "எலிபன்ட் பாத் பெசேஜ் மாவத்தை" |
| 5. பாதை விபரம் | : | சேர்குடாரத்வத்த மாவத்தையில் உள்ள "THE FAIR HEVEN" ஹோட்டலுக்கு முன்னால் இடது பக்கமாக திரும்பிச் செல்லும் பாதை. (வரிமதிப்பு இல. 47க்குரிய இடம்.) |

1-733

---

**வாரியபொல பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதி)*

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப் படி வாரியபொல பிரதேச சபையின் செயலாளர் யாபா முதியன்சேலாகே சேனாநாயக்க ஆகிய நான்,

* பிரதேச சபைகளில் குழு கூட்டத்தினை ஏற்படுத்தல், கூட்டம் நடாத்தல் பற்றிய துணை விதி.
* அமர்வு அறிக்கை மற்றும் தகவல்கள் சமர்ப்பித்தல் பற்றிய துணை விதி
* கல்லறைகளை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணை விதி.
* இறுதிகிரிகை சேவை வழங்கும் நிலையத்தின் நடவடிக்கைகளை நிருவகித்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடலுக்கான துணை விதி

ஆகிய துணை விதிகள்.

வாரியபொல பிரதேச சபை அதிகாரப் பிரிவில் செயற்படுத்தப்பட வேண்டும் என்று 2015.12.17 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 850 இற்கான தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என்று இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

வை. எம். சேனாநாயக்க,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
வாரியபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வாரியபொல,
2016, சனவரி 4.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்புடைய அமைச்சரினால் தொகுக்கப்பட்ட 2015.08.31 ஆந் திகதிய 1930/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும்,

* பிரதேச சபைகளில் குழு கூட்டத்தினை ஏற்படுத்தல், கூட்டம் நடாத்தல் பற்றிய துணை விதி.
* அமர்வு அறிக்கை மற்றும் தகவல்கள் சமர்ப்பித்தல் பற்றிய துணை விதி
* கல்லறைகளை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணை விதி.
* இறுதிகிரிகை சேவை வழங்கும் நிலையத்தின் நடவடிக்கைகளை நிருவகித்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடலுக்கான துணை விதி.

ஆகிய துணை விதிகள் நான்கு (4) 1957 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன துணை விதியில் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி வாரியபொல பிரதேச சபை அதிகாரப் பிரிவுகளுக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நான் தீர்மானிக்கின்றேன்.

1-881

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37 (1) "ஆ" பிரிவின் பிரகாரம், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் இல. 1922 ஐ கொண்ட 2015.07.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு சொந்தமான பாதைகளாக பிரகடனப்படுத்தப்பட்ட கீழே குறிப்பிடப்படும் பாதைகளுக்கு முன்னால் குறிக்கப்பட்டுள்ள நீளம் மற்றும் அகலங்களின்படி ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு சொந்தமான ஆதனமாக கருதப்பட்டு பராமரிக்கப்படுகின்றதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

சாந்தா பீ. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2016, தை மாதம் 7 ஆந் திகதி.

**அட்டவணை**

| தொடர் இல. | வீதியின் பெயர் | எல்லைகள் | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|
| 1 | நுகேகொட தேவாலய வீதியில் இருந்து ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை (கோட்டே வீதி) வரையிலான வீதி | வரி இல. 38பீ, 38/1, 38/2, 38/3, 38/5 வரை | 192 அடி | 15 அடி தொடக்கம் 20 அடி வரை |
| | | வரி இல. 231, 231/1, 233, 231/2, 233/2 | 153 அடி | 15 அடி |

1-885

# நானாவித அறிவித்தல்கள்

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

அபிவிருத்தியடையாத காணிகளுக்கான வரி அறவிடல் - 2016

பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் அலுவலகள், பொறுப்புக்களை நிறைவேற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளர் எச். டி. சரத் விக்ரமசிங்ஹ ஆகிய நான்,1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் அத்தியாயத்தின் ஊடாக கூறப்படவேண்டிய அந்த சட்டத்தின் 153 ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளின் பிரகாரம் 2015.11.13 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 93:13 இன் கீழ் பிரதேச சபை நிர்வாக பிரதேசத்திலுள்ள அபிவிருத்தியடையாத காணிகளுக்காக, அந்த காணியின் நிலையான நிலப்பெறுமதியில் 2% வரியினை 2016 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடப்பட வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன்.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 13.

1-640/1

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

காணிகளை விற்பனை செய்வதற்கான வரி - 2016

பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் அலுவலகள், பொறுப்புக்களை நிறைவேற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளர் எச். டி. சரத் விக்ரமசிங்ஹ ஆகிய நான்,1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அந்த சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் 2015.11.19 ஆந் திகதியிலான தீர்மான இலக்கம் 96:06 இன் கீழ் பிரதேச சபை நிர்வாக பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டிற்குரிய காணிகளை விற்பனை செய்வதற்கான வரி அறவீடு கீழ்குறிப்பிட்டவாறு இடம்பெற வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 (1) ஆம் பிரிவின் கீழ் பஸ்பாகே கோரளை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் பிரதேச சபை நிர்வாக பிரதேசத்திற்குள் யாதாயினுமொரு நிலத்தின் ஏல விற்பனையாளர், கொள்வனவாளர் அல்லது அவரது அலுவலர் அல்லது முகவரினால் ஏலவிற்பனை மூலமோ அல்லது நேரடி விற்பனை மூலமோ விற்பனை

*நிகழும் போது அந்த இடத்தின் விற்பனை பெறுமதியில் 1% சாதாரண வரியை 2016 ஆம் ஆண்டில் விதித்து அறவிடப்பட வேண்டும் எனவும், அந்த வரியை ஒப்பந்தக்காரர், விற்பனையாளர் அல்லது ஏலவிற்பனையாளர் அல்லது அவரது சேவையாளரினால் அல்லது முகவரினால் பஸ்பாகே கோரளை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என அறிவிக்கின்றேன்.*

*எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,*
*செயலாளர்,*
*பஸ்பாகே கோரளை பிரதேச சபை.*

*பஸ்பாகே கோரளை பிரதேச சபை,*
*ரம்புக்பிட்டி,*
*2015, நவெம்பர் 19.*

*1-640/2*

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

*நிலவரிக் கட்டணம் - 2016*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளராக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதியிலான தீர்மான இலக்கம் 93 :11 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்கு என்னால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*2016 ஆம் ஆண்டில் விதிக்கப்படும் நில வரியானது மாச்சு மாதம் 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் ஒவ்வொரு தவணைகளிலும் சமமான நான்கு தவணைக் கட்டணங்களாக பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*2016 ஆம் ஆண்டிற்கான முழுமையான நில வரியானது அந்த ஆண்டின் சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பு பிரதேச சபை அலுவலகத்துக்கு செலுத்தப்படுமாயின், அந்த முழுமையான நில வரி பெறுமதியில் 10% வீத கழிவும், ஒவ்வொரு தவணைக்கும் உரிய நிலவரியானது அந்தந்த தவணையின் முன்னைய மாதத்தின் இறுதித் தினத்திற்கு முன்பாக பிரதேச சபைக்கு செலுத்தப்படுமாயின் 5% வீத கழிவும் வழங்கப்படுவதுடன்,*

*அந்த வரியை ஒவ்வொரு தவணையின் முடிவிலும் செலுத்தாத சந்தர்ப்பத்தில் 15% வீத தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டும் என பஸ்பாகே கோரளை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,*
*செயலாளர்,*
*பஸ்பாகே கோரளை பிரதேச சபை.*

*பஸ்பாகே கோரளை பிரதேச சபை அலுவலகம்,*
*ரம்புக்பிட்டி,*
*2015, நவெம்பர் 13.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (3) ஆம் உப பிரிவின் கீழ் பஸ்பாகே கோரளை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ளதும், மேற்குறித்த சட்டத்தின் 135 ஆம் பிரிவின் கீழ் நிலவரி விலக்களிக்கப்படாததும், நிரந்தர அல்லத நிரந்தரமற்ற விவசாய நிலங்களுக்குமாக-*

*(அ) 5 ஹெக்டேயர் அல்லது அதற்கு அதிகமான சகல காணிகளுக்கும் அதன் ஒவ்வொரு ஹெக்டயருக்கு 10 ரூபா வீதம் வருடாந்த வரியாக 2016 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவதற்கும்,*

*(ஆ) மேற்குறித்த சட்டத்தின் 134 (3) ஆம் உப பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு கௌரவ அமைச்சரினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (ஆ) பிரிவு 1989.02.03 ஆந் திகதி*

பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நில வரி விதித்தல் மற்றும் அறவிடல் செயற்பாட்டிற்காக விசேட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பஸ்பாகே கோரளை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்தில் 5 ஹெக்டயருக்கு குறைந்த எனினும் 1 ஹெக்டயருக்கு குறையாத காணிக்காக 2016 ஆம் ஆண்டில் 50 ரூபா வீதம் வருடாந்த நிலவரியை விதித்து அறவிடுவதற்கும்,

(இ) பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வருடாந்த நிலவரியை மாச்சு மாதம் 31, யுன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் நான்கு தவணைகளிலும் சமமான நான்கு தவணைக் கட்டணங்களாக பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என பஸ்பாகே கோரளை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

1-640/3

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

நாய்களை பதிவு செய்தல் - 2016

நாய்களை பதிவு செய்யும் கட்டளைச்சட்டத்தின் (477 ஆம் அத்தியாயம்) IV ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2015.11.19 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 96 : 09 இன் கீழ் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்திற்குள் உள்ள ஒவ்வொரு ஆண் நாய்களுக்காக 10.00 ரூபா வீதமும் பெண் நாய்களுக்காக 7.50 ரூபா வீதமும் பதிவு கட்டணமாக 2016 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கும் அந்த கட்டணத்தை 2016 ஆம் ஆண்டிலேயே செலுத்த வேண்டும் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 19.

1-640/4

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

வியாபார வரி விதித்தல் - 2016

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அலுவலக செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாக 2015, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 99 : 06 இன் கீழ், 2016 ஆம் வருடத்திற்காக வியாபார வரியை விதித்து அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளேன். அவ்வாறு பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு விதிக்கப்படுகின்ற வரியானது அந்த ஆண்டின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பஸ்பாகே கோரளை பிரதேச சபை அலுவலகத்துக்கு செலுத்தப்பட வேண்டுமென மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 24.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அலுவலக செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாக அந்த பிரதேச சபை சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப அந்த சட்டத்தில் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட யாதாயினுமொரு துணைவிதியின் விதிமுறைகளின் கீழ் அனுமதிப்பத்திரம் அல்லது அந்த

*சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் யாதாயினுமொரு கைத்தொழில் வரியை செலுத்துவதற்கு தேவையற்ற யாதாயினுமொரு வியாபாரத்தைபஸ்பாகே கோரளை பிரதேச சபை நிர்வாக பிரசேத்தக்குள் 2016 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்லும் ஒவ்வொருவரிடமும் அந்த வியாபாரத்தின் ஒரு வருட வருமானம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் முதலாம் நிரலில் குறிப்பிடப்பட்ட விடய எல்லையில் ஏதேனுமொரு வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் அதன் இரண்டாம் நிரலில் குறிப்பிடப்பட்ட வியாபார வரியை 2016 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடுவதற்கும், அந்த வியாபார வரியை 2016 ஆம் ஆண்டில் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பஸ்பாகே கோரளை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும் நான் தீர்மானித்துள்ளேன்.*

| *நிரல் I* வருடத்திற்கான வியாபார தொழில் வருமானம் | *நிரல் II* வரி ரூபா ச. |
|---|---|
| *ரூ. 6,000 ஐ இனை விட அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்* | *0 0* |
| *ரூ. 6,001 இற்கும் ரூ. 12,000 இற்கும் இடைப்பட்ட சந்தர்ப்பத்தில்* | *90 0* |
| *ரூ 12,001 இற்கும் ரூ. 18,000 இற்கும் இடைப்பட்ட சந்தர்ப்பத்தில்* | *180 0* |
| *ரூ 18,001 இற்கும் ரூ. 75,000 இற்கும் இடைப்பட்ட சந்தர்ப்பத்தில்* | *360 0* |
| *ரூ 75,001 இற்கும் ரூ. 1,50,000 இற்கும் இடைப்பட்ட சந்தர்ப்பத்தில்* | *1,200 0* |
| *ரூ 1,50,000 இனை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில்* | *3,000 0* |

வியாபாரத்தின் பெயர் விபரங்கள்

* பணம் வட்டிக்கு வழங்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
* தரகு பிரதிநிதிகள்
* ஏலவிற்பனையாளர்கள்
* தரகர்கள்
* ஒப்பந்தக்காரர்கள்
* நகை அடகுபிடிப்பவர்கள்
* தனியார் வகுப்புகள் நடாத்தும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
* கட்டிடக் கலைஞர்கள்
* காப்புறுதி முகவர்கள்
* தனியார் கணக்காய்வு நிறுவனம்
* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர் நிலையங்களை நடாத்திச் செல்லல்
* போக்குவரத்து பிரதிநிதிகள்
* வாடகை வாகன உரிமையாளர்கள்
* மோட்டார் வாகன விற்பனையாளர்கள்
* மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள்
* கண் பரிசோதகர்கள்
* சாரதி பயிற்றுவிப்பாளர்கள்
* மாணிக்கக்கல் வியாபாரிகள்
* தங்கநகை வியாபாரிகள்
* விழா மண்டப வழங்குநர்கள்
* சட்ட அலுவலகங்களை நடாத்துதல்
* நொத்தாரிசு அலுவலகமொன்றை நடாத்துதல்
* நோயாளிகளுக்கு உதவி புரியும் ஆங்கில வைத்திய முறைமையிலான மருந்துச்சாலையொன்றை நடாத்திச்செல்லல்
* நோயாளிகளுக்கு உதவி புரியும் ஆயுர்வேத முறைமையிலான மருந்துச்சாலையொன்றை நடாத்திச் செல்லல்
* திரையரங்குகளை நடாத்துதல்
* நடமாடும் புகைப்பட மற்றும் வீடியோ கலைஞர்கள்
* பந்தயக்காரர்கள்
* வங்கிகள்
* தொழில் முகவர் நிலையங்களை நடாத்திச் செல்லல்
* தொலைபேசி முகவர் நிலையங்களை நடாத்திச் செல்லல்
* பொருட்கள் வழங்கும் முகவராக செயற்படல்
* பொருட்கள் களஞ்சியசாலையை நடாத்திச் செல்லல்
* பொருட்கள் விநியோகம் செய்தல்
* பொருட்கள் உற்பத்தியாளராக செயற்படல்
* பொருட்கள் ஏற்றுமதியாளராக செயற்படல்
* பொருட்கள் அடகிற்கு பெறும் நிலையமொன்றை நடாத்திச் செல்லல்
* மதுபானம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட குடிபானங்கள் விற்பனை நிலையம்
* அதிஷ்ட லொத்தர் சீட்டு விற்பனை முகவர்கள்
* உபதபால் அலுவலகங்கள்
* வழங்குநர்கள்

* நிதி நிறுவனங்கள்
* உடற்பயிற்சி நிலையமொன்றை நடாத்திச் செல்லல்
* தனியார் வைத்தியசாலைகளை நடாத்திச் செல்லல்
* சாரதி பயிற்றுவிப்பு பாடசாலையொன்றை நடாத்திச் செல்லல்
* CD, DVD இரவல் வழங்கும் அல்லது CD, DVD ரைட் செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
* தனியார் நில அளவை சேவை

1-640/5

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

*பிரதேச சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்துவது தொடர்பான கட்டணம் - 2016*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளராக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2015, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 98 : 06 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்கு என்னால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 24.

**தீர்மானம்**

மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்ட 2011.06.30 ஆந் திகதியிலான 1712/22 ஆம் தீர்வு இலக்கத்திலான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி, அந்த துணைவிதியின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை 2016 ஆம் ஆண்டில் விதித்து அறவிடப்பட வேண்டும் என பஸ்பாகே கோரளை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் | |
| (அ) முச்சக்கர வண்டிகளுக்காக | 100 0 |

1-640/6

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

*அறிவித்தல் பதாகைகள் மற்றும் தென்படும் சூழல் தொடர்பான துணைவிதிகள் - 2016*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளராக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 93 : 14 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்கு என்னால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

அதன்படி பஸ்பாகே கோரளை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்தில் அறிவித்தல் பதாகைகளை காட்சிப்படுத்துவதற்காக பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அதற்காக இந்த சபையினால் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடப்படும் எனவும் மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 13.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 22 (1) மற்றும் 122-126 ஆம் பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்கத்தினாலான உள்ளூராட்சி அதிவிசேட வர்த்தமானியின் IV (ஆ) பிரிவில் கௌரவ உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட துணைவிதியின் 39 ஆம் பிரிவில் அறிவித்தல் பதாகைகள் மற்றும் தென்படும் சூழல் தொடர்பான துணை விதியின் விதிமுறைகளின் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபை சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவின் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கேற்பவும் மத்திய மாகாண முதலமைச்சரின் CPC/MS/01/06/04 ஆம் இலக்க கடிதத்திற்கமைவாகவும் பஸ்பாகே கோரளை பிரதேச சபை எல்லைக்குள் சில வீதிகளில், பாதைகளில், ஓடைகளில், தெருக்களில் அல்லது ஆகாயத்தில் தென்படும் வகையில் அறிவித்தல்களை (பெயர் பலகை உட்பட) காட்சிப்படுத்துவதற்காக கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணங்களை 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து மீண்டும் திருத்தம் செய்யப்படும் வரை விதித்து அறவிடப்பட வேண்டும் என பிரேரிக்கப்பட்ட அட்டவணை.*

**அட்டவணை**

*1 அறிவித்தல் பதாகைகளை காட்சிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியின் கீழ் 7 நாட்களுக்கு முன்பு அனுமதி பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்பத்திரத்தை சபையில் முன்வைத்தல் வேண்டும். அந்த அனுமதிப்பத்திரம் கீழ்குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் பூரணப்படுத்தல் வேண்டும்.*

- *செயலாளருக்கு அனுப்பப்பட்ட எழுத்துமூலமான விண்ணப்பப்பத்திரம்*
- *அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்ட சுற்றளவுக்கு ஒப்பாக 1:1000 அளவுத்திட்டத்துக்கு குறையாத அளவுத் திட்டத்தில் வரையப்பட்ட நிலவரைப்படம்*
- *1:1000 அளவுத்திட்டத்துக்கு குறையாத அளவுத் திட்டத்தில் வரையப்பட்ட அந்த அறிவித்தல் பலகையின் உருவ வரைபடம்.*
- *அந்த திட்ட வரைபடத்தின் அல்லது உருவ வரைபடத்தின் சாதகமான திருத்தங்கள்*
- *காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல் பதாகையில் ஈடுபடுத்தப்பட்ட நிறங்கள் அனைத்தையும் பயன்படுத்தி சிறு அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட அந்த அறிவித்தலின் பிரதி.*
- *நடைபாதைகளிலும் பிரதான பாதைகளிலும் அண்ணளவாக தயாரிக்கப்பட்ட பிரசார அறிவித்தல்கள் அடங்கிய திட்ட வரைபடம்*
- *அறிவித்தல் பதாகைகளுக்குரித்தான விபரங்கள் மற்றும் அடையாளங்கள்*

**கட்டணம் :**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | விண்ணப்பப்படிவக் கட்டணம் | 500 0 |
| 2. | "பெரசெரி" கட்டணம் 01 சதுர அடிக்கு | 30 0 |
| 3. | அனுமதி பெற்றுக்கொள்ளாமைக்கான கட்டணம் நாளொன்றுக்கு | 250 0 |

| தொடர் இலக்கம் | பெயர் பலகையின் தன்மை | சதுர அடி அளவு | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 3 மாதங் களுக்கு குறைவானவை ரூ . ச. | 3 மாதங்க ளுக்கும் 6 மாதங்களுக்கும் இடையில் ரூ.ச. | ஒரு வருடம் ரூ. ச. |
| 1 | யாதாயினுமொரு சுவர் அல்லது மதிலில் விளம்பரப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்கள் | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 25 | 25 | 30 |
| | | 10 இற்கு மேல் | 25 | 30 | 45 |
| 2 | துணி டிஜிட்டல் பெனரிற்காக | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 30 | 35 | 40 |
| | | 10 இற்கு மேல் | 35 | 40 | 45 |
| 3 | தகரம் அல்லது மரப்பலகை மூலம் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்கள் | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 35 | 40 | 45 |
| | | 10 இற்கு மேல் | 40 | 45 | 50 |

| தொடர் இலக்கம் | பெயர் பலகையின் தன்மை | சதுர அடி அளவு | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 3 மாதங் களுக்கு குறைவானவை ரூ . ச. | 3 மாதங்க ளுக்கும் 6 மாதங்களுக்கும் இடையில் ரூ.ச. | ஒரு வருடம் ரூ. ச. |
| 4 | மின்சாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற விளம்பர அறிவித்தல்கள் | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 45 | 45 | 50 |
| | | 10 இற்கு மேல் | 50 | 55 | 60 |
| 5 | மின்சாதன உபகரணங்களை கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற விளம்பர அறிவித்தல்கள் | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 40 | 45 | 50 |
| | | 10 இற்கு மேல் | 50 | 55 | 60 |
| 6 | ப்ளாஸ்டிக் அல்லது பைபர் பெயர் பலகைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விளம்பர அறிவித்தல்கள் | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 50 | 55 | 60 |
| | | 10 இற்கு மேல் | 55 | 60 | 65 |
| 7 | பொலித்தீன் மற்றும் காட்போட் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விளம்பர அறிவித்தல்கள் | 2 இற்கும் 10 இற்குமிடையில் | 20 | 25 | 30 |
| | | 10 இற்கு மேல் | 30 | 35 | 40 |

1-640/7

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

வரிப்பணக் கட்டணங்களை அறவிடல் - 2016

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளராக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதியிலான தீர்மான இலக்கம் 93 : 10 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்கு என்னால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

2016 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்ட வரிப்பணக் கட்டணங்களை மாச்சு 31, யுன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் நான்கு தவணைகளில் சமமான நான்கு தவணைக் கட்டணங்களாக பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டிற்காக முழுமையான வரிப்பணக்கட்டணத்தை அந்த வருடத்தின் சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பு பிரதேச சபை அலுவலகத்துக்கு செலுத்தப்படுமாயின் அந்த முழுமையான வரிப்பணக்கட்டணப் பெறுமதியில் 10% கழிவும், ஒவ்வொரு தவணைக்குமுரிய வரிப்பணக்கட்டணங்களை அந்தந்த தவணையின் முதல் மாதத்தின் கடைசி தினத்திற்கு முன்பு பிரதேச சபைக்கு செலுத்தப்படுமாயின் 5% கழிவும் வழங்கப்படும்.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 13.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பஸ்பாகே கோரளை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்திற்குள் வளர்ச்சியடைந்த பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிலையான சொத்துகளின் 2016 ஆம் ஆண்டின் பெறுமதிக்காக 2011 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மதிப்பீடு 2015 ஆம் ஆண்டிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையினால் அந்த மதிப்பீட்டையே 2016 ஆம் ஆண்டிலும் ஏற்றுக்கொள்வதற்கும்,

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பஸ்பாகே கோரளை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்பாகே கோரளை பிரதேச சபையினால் வளர்ச்சியடைந்த பிரதேசமாக பிரேரிக்கப்பட்டுள்ள பவ்வாகம பிரதேசத்தில் அமைந்துள்ள நிலையான சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியில் 5% வரியையும் கடியன்லேன பிரதேசத்தில் அமைந்துள்ள நிலையான சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியில் 8% வரியையும்;

(இ) அந்த வரிப்பணக்கட்டணங்களை பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் கீழுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2016, மாச்சு 31, யூன் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் நான்கு தவணைகளில் சமமான நான்கு தவணைக் கட்டணங்களாக பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும்.

குறித்த வரிப்பணக்கட்டணத்தை அந்தந்த தவணை இறுதியில் செலுத்த தவறும் சந்தர்ப்பங்களில் 15% தண்டப்பணத்தையும் அறவிடுவதற்கு பஸ்பாகே கோரளை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

1-640/8

---

**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

வாகனங்கள் மற்றும் மிருகங்களுக்கான வரி - 2016

பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் அலுவல்கள், பொறுப்புக்களை நிறைவேற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளர் எச். டி. சரத்விக்ரமசிங்ஹ ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அந்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் விதி முறைகளின் பிரகாரம் 2015.11.13 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 93 : 12 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டவாறு வாகனங்கள் மற்றும் மிருகங்கள் தொடர்பான வருடாந்த வரியினை பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடப்பட வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன்.

எச். டி. சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை.

பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி,
2015, நவெம்பர் 13.

**அட்டவணை**

| | | நிரல் I | நிரல் II ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | (i) | மோட்டார் வண்டி, மோட்டார் கார், மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள், வண்டி, ரிக்ஷோ வண்டி, துவிச்சக்கரவண்டி, மற்றும் இரு சக்கரங்களற்ற ஏனைய வாகனங்கள் | 25 0 |
| | (ii) | சகல துவிச்சக்கர வண்டிகள் அல்லது இருசக்கர வண்டிகள் அல்லது துவிச்சக்கர கார்களுக்காக | |
| | | (அ) வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாயின் | 18 0 |
| | | (ஆ) வியாபாரமற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாயின் | 4 0 |
| | (iii) | சகல வண்டிகள் | 20 0 |
| | (iv) | சகல கைப்பிடி வண்டிகள் | 10 0 |
| | (v) | சகல ரிக்ஷோ வண்டிகள் | 7 50 |
| | (vi) | குதிரை, போனிக்குதிரை அல்லது செம்மறி ஆடு | 15 0 |
